# *நிதி ஆணைக்குழு*

***<u>நிதி ஆணைக்குழுவின் ஆரம்பமட்ட தேர்ச்சி பெற்ற சேவை வகுதியின் மின்சாரத் தொழில்நுட்பவியலாளர் தரம் III இற்கான (திணைக்களமயப்படுத்திய) ஆட்சேர்ப்பு (திறந்த) - 2025</u>***

*நிதி ஆணைக்குழுவின் ஆரம்ப மட்ட தேர்ச்சி பெற்ற பிரிவின் மின்சார தொழில்நுட்பவியலாளர் தரம் III பதவியில் காணப்படும் 01 வெற்றிடத்திற்காக திறந்த அடிப்படையில் தகுதியானவர்களை தெரிவுசெய்வதற்காக தகுதியுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

1. *ஆட்சேர்ப்பு செய்யும் முறை :-*

   *நிதி ஆணைக்குழுவின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட நேர்முகத் தேர்வுக் குழுவொன்றினால் முன்னெடுக்கப்படும் தொழில்சார் பரீட்சையில் மற்றும் தகுதி மதிப்பீட்டு நேர்முகத் தேர்வில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.*

2. *பணியமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள் :-*

   2.1. *அரச சேவையின் ஆட்சேர்ப்புக்களை கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் தாபன விதிக்கோவை மற்றும் நிதி ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கும், 2022.12.14 ஆம் திகதிய இலக்கம் 2310/29 அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும்,2021.12.16 ஆம் திகதி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிதி ஆணைக்குழுவின் ஆரம்பமட்ட தேர்ச்சி பெற்ற சேவை வகுதியின் மின்சார தொழில்நுட்பவியலாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் நியமங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கும் அந்நடைமுறைக்கு செய்யப்பட்டுள்ள அல்லது எதிர்காலத்தில் செய்யும் திருத்தங்களுக்குட்பட்டு தெரிவுசெய்யப்படும் ஒரு விண்ணப்பதாரிக்கு பதவியின் தரம் III இல் நியமனம் வழங்கப்படும்.*

   2.2. *இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உட்பட்டதுமாகும். எவ்வாறாயினும் புதிதாக நியமனம் பெற்றவர்களுக்கு கையளிக்கப்படும் ஓய்வூதியத் திட்டம் குறித்து அரசாங்கத்தினால் எதிர்வரும் காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு நியமனம் பெற்றவர்கள் உட்படுவர். விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு தனது பங்களிப்பினை செலுத்த வேண்டும்.*

   2.3. *இப்பதவியில் நியமனம் பெறும் உத்தியோகத்தர் மூன்று வருட (03) தகுதிகூர் காலத்திற்கு உட்படுவதோடு, அம்மூன்று வருடத்திற்குள் (03) முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தி பெறல் வேண்டும்.*

   2.4. *அரச நிர்வாகச் சுற்றறிக்கை 18/2020 மற்றும் அதற்கு இடைநேர்விளைவான சுற்றறிக்கைகளின் படி உரிய மட்டத்தில் அரச கரும மொழித் தேர்ச்சியினை பெற வேண்டும்.*

   2.5. *அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகளுக்கும், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பிற்கும், அரச நிதி ஒழுங்குவிதிகளுக்கும், நிதி ஆணைக்குழுவின் ஏனைய உத்தரவுகளுக்கும் இவ்வாட்சேர்ப்பு கட்டுப்படும்.*

   2.6. *தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் விண்ணப்பிக்க வேண்டும்.*

3. சம்பள அளவுத்திட்டம் :-

2025.03.25 ஆம் திகதிய 10/2025 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் அட்டவணை I இன் படி ஆரம்ப மட்ட தேர்ச்சி பெற்ற வகுதியின் PL-3 III தரத்திற்கான மாதச் சம்பள அளவு

ரூ. 42,780-10X490-10X540-10X590-12X630 - 66,540/- ஆகும்.

சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய அதன் அட்டவணை IIஇல் குறிப்பிடப்பட்டுள்ளது போன்றே சம்பளம் செலுத்தப்படும்.

4. ஆட்சேர்ப்புக்கான தகைமைகள் :-

4.1. கல்வித் தகைமைகள் :

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் திறமைச் சித்திகள் இரண்டுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

குறிப்பு :- மின்சார தொழில்நுட்பவியலாளர் பதவியின் பொறுப்புக்களுக்கு அமைய தேசிய தொழில் தகுதியின் (NVQ) மூன்றாம் மட்டம் (03) அல்லது அதிலும் கூடிய தேர்ச்சி சான்றிதழ் பெற்றுள்ள விண்ணப்பதாரிகளுக்கு கல்வித் தகைமைகள் செல்லுபடியாக மாட்டாது.

4.2. தொழில் சார் தகைமைகள்:-

மின்சார தொழில்நுட்பவியலாளர் பதவியின் பொறுப்புக்களுக்கமைய மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்துறை/தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வெளியிடப்படும் தேசிய தொழில் தகுதியின் (NVQ) நான்காவது (04) மட்டத்திற்கு குறையாதவாறான மட்டமொன்றில் தேர்ச்சி சான்றிதழ் பெற்றிருத்தல்.

4.3. அனுபவம் :-

தொடர்புடைய துறையில் அனுபவம் மேலதிக தகுதியாகக் கருதப்படும்.

4.4. வயதெல்லை:-

விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு வயது 18 இற்கு குறையாதவராகவும் வயது 45 இற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

4.5. உடற்றகைமைகள்:-

அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எப்பாகத்திலும் பணி புரியவும் பதவியின் பணிகளை செவ்வனே செய்வதற்கு உடல் ரீதியாகவும் மனநல ரீதியாகவும் போதுமானளவு தகுதியானவராக இருக்க வேண்டும்.

4.6. ஏனைய தகைமைகள்:-

(அ) இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரி சிறந்த நற்பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

(இ) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக 4.1 மற்றும் 4.2 இல் குறிப்பிட்டுள்ள அனைத்து தகைமைகளையும் விண்ணப்ப அறிவித்தலில் குறிப்பிடப்படும் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் அனைத்து வழிகளிலும் பூர்த்தி செய்திருப்பது கட்டாயமாகும்.

5. ஆட்சேர்ப்பு முறை :-

5.1. தொழில்முறை பரீட்சை :

| பாடங்கள் | உயர்ந்தபட்ச புள்ளி | சித்தி பெறும் புள்ளியின் அளவு |
|---|---|---|
| 1. மின்சார தொழில்நுட்பவியல் அறிவு | 60 | 40% |
| 2. பொது அறிவு | 40 | 40% |

நிதி ஆணைக்குழுவின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட நேர்முகத் தேர்வுக் குழுவொன்றினால் தொழில்முறை பரீட்சை முன்னெடுக்கப்படும்.தொழில்முறை பரீட்சையில் சித்திபெறும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் தகைமைகளை மதிப்பிடும் நேர்முகத்தேர்விற்கு அழைக்கப்படுவர்.

5.2. தகைமைகளை மதிப்பிடும் நேர்முகத்தேர்வு :

| புள்ளிகள் வழங்கப்படும் முதன்மையான தலைப்புக்கள் | உயர்ந்தபட்ச புள்ளியின் அளவு |
|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் | 30 |
| 2. அனுபவம் (சான்றிதழ்களினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்) | 40 |
| 3. மேலதிக தொழில்சார் தகைமைகள் | 25 |
| 4. நேர்முகத் தேர்வில் காட்டும் திறமை | 05 |
| மொத்த புள்ளிகள் | **100** |

ஆட்சேர்ப்பு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் மேற்குறிப்பிட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள புள்ளி வழங்கப்படும் முதன்மையான பிரிவுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள உயர்ந்தபட்ச புள்ளிகளின் அளவினுள் தகைமைகளை மதிப்பிடும் நேர்முகத் தேர்விற்கான விவரமான புள்ளி நடைமுறையினை அங்கீகரிப்பது நியமன அதிகாரியால் மேற்கொள்ளப்படும்.

6. விண்ணப்பிக்கும் முறை:-

விண்ணபப்பப்படிவம் இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக வேண்டும். அத்துடன் செ.மீ 22 – 29 அளவினை உடைய A4 தாளில் தயாரிக்க வேண்டும். விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்யும் போது மிகச்சரியான தகவல்களை கவனமாக வழங்குதல் வேண்டும். அனைத்து வழிகளிலும் பூர்த்தியாகாத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றதாக அறிவிக்கப்பட மாட்டாது.தகைமைகளைப் பரீட்சிக்கும் போது ஏதேனும் ஒரு விண்ணப்பதாரி பொருத்தமற்றவர் எனத் தெரிய வருமாயின் எச்சந்தர்ப்பத்திலும் அவரின் விண்ணப்பத்தினை நிராகரிப்பதற்கு நிதி ஆணைக்குழுவின்

*செயலாளரினால் முடியும். விண்ணப்பதாரியினால் முன்வைக்கப்படும் தகவல்கள் எச்சந்தர்ப்பத்திலும் பொய்யானவை என நிரூபனமாயின் அவரை அரச சேவையிலிருந்து பணி நீக்கம் செய்ய முடியும்.*

7. *விண்ணப்பப்படிவத்தினை அனுப்புதல்:-*

   7.1. *இவ்வறிவித்தலின் இறுதியிலுள்ள மாதிரிப்படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2025.07.31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறுமாறு கீழுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.பதிவுத் தபாலில் அல்லது தபாலின் மூலம் கிடைக்கப்பெறாத விண்ணப்பப்படிவங்கள் அல்லது அத்தினத்திற்கு பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.*

   *செயலாளர்,*<br>
   *நிதி ஆணைக்குழு,*<br>
   *இலக்கம் 03, சரண மாவத்தை,*<br>
   *இராஜகிரிய.*

   7.2. *விண்ணப்பப்படிவத்தினை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "நிதி ஆணைக்குழுவின் மின்சாரத் தொழில்நுட்பவியலாளர் தரம் III இற்கான ஆட்சேர்ப்பு (திறந்த)" எனத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

   7.3. *தற்போது அரச சேவையில் பணி புரியும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பப்படிவங்கள், விண்ணப்பதாரி தெரிவு செய்யப்பட்டால் விடுவிக்கப்படுவார் என்ற அத்தாட்சியொன்றுடன் நிறுவன தலைவர் மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.*

8. *கவனத்திற் கொள்ள வேண்டிய வேறு விடயங்கள் :-*

   8.1. *விண்ணப்பதாரிகளின் அடையாளத்தினை உறுதி செய்வதற்காக ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வெளியிடப்படும் தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டினை நேர்முகத்தேர்வுக்குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும்.*

   8.2. *சான்றிதழ்களின் மூலப்பிரதியினை கேட்கும் போது முன்வைக்கத் தவறும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பப்படிவங்கள் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.*

   8.3. *இங்கு குறிப்பிடப்படாத வேறு ஏதேனும் விடயம் இருந்தால் அது தொடர்பாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானம் எடுக்கப்படும். அனைத்து விண்ணப்பதாரிகளும் இவ்வறிவித்தலில் குறிப்பிட்டுள்ள பொது நியதிகள் மற்றும் நடைமுறைகளுக்கேற்ப செயற்படுவதற்கு கட்டுப்பட்டுள்ளனர்.*

(இவ்வர்த்தமானி அறிவித்தலில் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி வாசகங்களுள் ஏதேனும் ஒத்துப்போகாத தன்மை காணப்படின் அச்சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூல வாசகம் செல்லுபடியாகும்.)

*2025 ஜூலை 01 ஆந் திகதி*<br>
*நிதி ஆணைக்குழு அலுவலகத்தில்*

*ஏ.டீ.எம்.யூ.டீ.பீ.தென்னக்கோன்*<br>
*செயலாளர்*